**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.HMOP.No. 127/2021**
**Deposition of witness of Respondent – R.W.2 (கயல்விழி)**
**27.11.2025**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தது என்றால் எனது தாயார் அழைத்து வந்தார்.
2. எனது நிரூபண வாக்குமூலத்தை யார் தயார் செய்தது என்றால் எனது தாயார் தான் தயார் செய்தார்.
3. எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 08.12.2019 ஆம் தேதி நடந்தது.
4. எனது திருமணத்தை எனது தாயார் தான் முன் நின்று நடத்தினார் என்றால் சரிதான்.
5. எனது திருமணத்திற்கு எனது தாயார் ஒரு வருடமாக பேசி தயார் செய்து நடத்தி வைத்தார் என்றால் சரிதான்.
6. எனது திருமணத்திற்கு எனது தகப்பனாரை அழைத்தோமா என்றால் அழைத்தோம், அவர் வர மறுத்துவிட்டார். என்ன காரணத்தினால் அவர் வரமறுத்துவிட்டார் என்றால் அவர் சொல்லும் மாப்பிள்ளையை தான் திருமணம் செய்ய வேண்டும் என்று சொல்லி வரமறுத்துவிட்டார்.
7. திருமணத்தின்போது எனக்கு 19 வயது என்றால் சரிதான். நான் DMLT–ANM–BA படித்துள்ளேன். மேற்படி படிப்பை 2018 முதல் 2020 வரை படித்தேன் என்றால் சரிதான். மேற்படி படிப்பிற்கு எனது தாயார் தான் செலவு செய்தார் என்றால் சரிதான்.
8. மேற்படி படிப்பிற்காக எனது தகப்பனாரிடம் பணம் கேட்டேனா என்றால் இல்லை. அவருடன் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் தான் பணம் கேட்கவில்லை என்றால் சரிதான்.
9. எனக்கும், எனது கணவருக்கும் இடையே 10 வருடம் வயது வித்தியாசம் இருக்கும்.
10. என்னை மனுதாரர் அடித்ததாக அவர்மீது நானும், எனது தாயாரும் சேர்ந்து இலுப்பூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் அவர்மீது குற்ற எண் 102/2024 என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார் என்றால் சரிதான்.
11. மனுதாரருக்கு ஜாமீன் வழங்ககூடாது என்று இலுப்பூர் நீதிமன்றத்தில் நாங்கள் தடைமனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான்.

12. எனது வளைகாப்பிற்கு நானும், எனது தாயாரும் சேர்ந்து மனுதாரரை அழைத்தோமா என்றால் எனது தாயார்தான் அழைத்தார். அப்போது எனது தாயாரும் தகப்பானரும் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தார்களா என்றால் இல்லை, பேசிக்கொண்டிருந்தார்கள்.

13. உண்மையில் மனுதாரரும், எதிர்மனுதாரரும் பேசிக்கொண்டு இருந்திருந்தால் எனது வளைகாப்பிற்கு எதிர்மனுதாரர் சென்று அழைத்திருக்க வாய்பில்லை என்றால் சரியல்ல.

14. எனது வளைகாப்பிற்கு மனுதாரரை அழைத்ததாக எனது தாயார் அவரது எதிருரையில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

15. மனுதாரர் எனது தாயாருடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக எனது தாயார் எந்த நீதிமன்றத்திலும் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

16. புதுக்கோட்டை சமூக நலத்துறையில் மனுதாரர் மீது எனது தாயார் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். மனுதாரருக்கு எப்போது உடல்நலம் பாதிக்கப்பட்டது என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

17. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சம்பவ இடத்திற்கான பட்டா மனுதாரர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். குற்ற வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிராக சாட்சி சொல்ல நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

18. நான் கொடுத்த புகாரின் பேரில் பதியப்பட்ட வழக்கில் இந்த மனுதாரருக்கு எதிராக சாட்சியம் அளித்து அவரை ஜெயிலுக்கு அனுப்ப எனக்கு சம்மதமா என்றால் சம்மதம் தான்.

19. எனது தாயார் செய்த கொடுமையிலிருந்து மனுதாரர் தனது உயிரை காப்பாற்றிகொள்ள இந்த விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

20. எனக்கு குழந்தை பிறந்தபோது மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, தெரிவித்தோம். எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது. மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

S/d – C.Rajesh, B.A.B.L.,
சார்பு நீதிபதி,
கீரனூர்.